முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
RLTOP – 01/2024

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி–1 விஜயலெட்சுமி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) மனுதாரர் இடத்தில் நான் வாடகைக்கு இருக்கிறேன் என்றால் சரிதான். மனுதாரர் மேற்படி இடத்தை எப்போது வாங்கினார் என்றால், 2022 ல் வாங்கினார். எனது கடைக்கு அருகில் மேற்குபுறம் மனுதாரர் நகைக்கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். எனது கடைக்கு மேலே மனுதாரர் குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது கடையில் இருந்து சுமார் 5 நிமிட துாரத்தில் வட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்றம், தபால் அலுவலகம் ஆகியவற்றிற்கு செல்லலாம் என்றால் சரிதான். 5 நிமிட துாரத்தில் குளித்தலை பேருந்து நிலையத்திற்கும், ஹபீபா வணிக வளாகத்திற்கும் செல்லலாம் என்றால் சரிதான். எனது கடைக்கு அருகில் வங்கி உள்ளது என்றால் சரிதான். எனது கடை அமைந்துள்ள பகுதி பிரதான கடைவீதி என்றால் சரிதான். மனுதாரருக்கு நான் முன்பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2) மனுதாரர் எனது கடையை தனது சொந்த உபயோகத்திற்கு வேண்டும் என்று கிரையம் பெற்ற உடன் என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். நான் என்ன பதில் கூறினேன் என்றால், எனக்கு எப்போது நல்ல கடை கிடைக்கிறதோ அப்போது காலி செய்கிறேன் என்று கூறினேன். இந்த மனு சுமார் 3 வருடம் நடந்து வருகிறது என்றால் சரிதான். தற்போதுவரை எனக்கு நல்ல கடை கிடைக்கவில்லையா என்றால் கிடைக்கவில்லை. எப்போது கிடைக்கும் என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. கிடைத்தால்தான் காலி செய்வேனா என்றால் ஆமாம். மனுதாரர் கிரையம் வாங்கியவுடன் என்னிடம் மனு சொத்தை 6 மாதத்தில் காலி செய்து கொடுக்குமாறும், அதுவரை மாத

வாடகை ரூ.15,000/- கொடுக்குமாறும் சொன்னார் என்றால் சரியல்ல. மேற்படி கால அவகாசமும், வாடகையும் நான் கேட்டுக் கொண்டதால் மனுதாரர் ஒப்புக் கொண்டார் என்றால் சரியல்ல. நான் மனுதாரரிடம் வாடகை செலுத்தியதற்கு ஏதேனும் ஆதாரம் வைத்திருக்கிறேனா என்றால் வைத்திருக்கிறேன்.

3) மனுதாரருக்கு நான் வாடகையே கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, தொலைபேசி மூலமாக செலுத்தியுள்ளேன். தொலைபேசியில் செலுத்தியதற்கு ஆதாரம் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் ஒப்புக்கொண்ட வாடகையான ரூ.15,000/- ஐ நான் தற்போதுவரை செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் செலுத்தியதாக சொல்லும் வாடகைக்கு மனுதாரரிடம் இருந்து ரசீது வாங்கினேனா என்றால் இல்லை. நான் மனுதாரருக்கு எதிராக என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனக்கு கடை வேண்டும் என்றும், எங்களை காலி செய்யக்கூடாது என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 40 வருடங்களாக மேற்படி கடையை நடத்தி வருவதால் அந்த கடையை எப்போதும் காலி செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றம் மூலம் எங்களை காலி செய்ய வைப்பதில் எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை.

4) நீதிமன்றம் மூலமாகத்தான் எங்களை காலி செய்ய வேண்டும் என் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சட்டப்படியான நடவடிக்கையை மனுதாரர் எடுத்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு மனு சொத்தில் இருந்து நல்ல வருவாய் கிடைக்கிறதா என்றால், நடுத்தரமான வருவாய் கிடைக்கிறது. எனது கடையில் எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள் என்றால், எனது கணவருடன் 2 பேர் வேலை செய்கிறார்கள். எனக்கும், எனது கணவருக்கும் வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் வீடு உள்ளது. மனுசொத்து நகரத்தின் மையப்பகுதியில் உள்ளது என்றும், எனவே மனுதாரர்

கூறியுள்ள ரூ.15,000/- வாடகை நியாயமானது என்றால் சரியல்ல. மனு கடைக்கு மேலே அவர் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றும், மனுசொத்து மனுதாரரின் சொந்த பயன்பாட்டிற்கும், கடை அபிவிருத்திக்கும் தேவைப்படுகிறது என்றும், ஆனால் நாங்கள் காலி செய்ய மறுக்கிறோம் என்றால் சரியல்ல.

5) ஒப்புக்கொண்ட வாடகையை மனுதாரருக்கு நாங்கள் செலுத்தாமல் இருந்து வருவதாலும், கடையை காலி செய்ய கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனு கடையை யார் பார்த்து கொள்கிறார்கள் என்றால், நான் வாரத்தில் 2 நாட்கள் வருவேன், மற்ற நாட்களில் எனது கணவர் பார்த்துக் கொள்வார். மனுதாரர் மனு கடையை காலி செய்ய சட்டப்படியான நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும், அடாவடி செயல்களில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நான் அசல் வழக்கு 112/2023ல் சாட்சியம் அளித்த போது மனுதாரர்/பிரதிவாதி தாவா கடையை காலி செய்ய சொல்லி நல்ல முறையில்தான் என்னிடம் கூறினார் என ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எவ்வித காரணமும் இல்லாமல் வாடகையை செலுத்தாமலும், கடையை காலி செய்யாமலும் இருந்து வருகிறேன் என்றும், எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**